ஆத்ம ஜோதி

சிருங்கேரி சாரதாபீட ஜகத்குரு
ஸ்ரீசந்திர சேகர பாரதி சுவாமிகள்.

ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்.

சோதி 6 | ஐயஞ்சு ஆவணிமீ 1-ந் திகதி | சுடர் 10

பொருளடக்கம்.

	விஷயம்	பக்கம்
1	ஸ்ரீ சுப்பிரமணிய.....சுலோகங்கள்	253
2	சங்கர சத்குரு	254
3	பிரம்மவித்தியா பிரகாசிகை	255
4	பஜகோவிந்தத்திற்கு முன்னுரை	258
5	விவேக சூடாமணிச் சாரம்	260
6	தமிழ் நூல்களில் அத்வைதம்	261
7	உலகம் சிவலிங்கமயம்	263
8	சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடம்	265
9	இன்னும் இரக்கமில்லையா?	267
10	ஸ்ரீகேதார்-பத்திரியாத்திரை	268
11	திருப்பாணழ்வார்	274
12	செய்தித்திரட்டு	276

ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75 வருட சந்தா ரூ 3.

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, மில் பிளேஸ், கொள்ளுப்பிட்டி கொழும்பு

பதிப்பாசிரியர்:— நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம் தாவளப்பிட்டி [சிலோன்]

ஆதிசங்கர பகவத் பாதர் அருளிய

ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்திலிருந்து

ஆறு சுலோகங்கள்.

என் முன்னர் வந்தோர் பிறப்பென்னு வேலை
யினையேறி ஒருன்று நிலமேல் விளக்கித்
துன்னுங் கடற் செந்தி னுறைகின்ற தூயோன்
துங்கப் பராசக்தி யருள் சேயை நினைவாம்

○ ○ ○

திரைபோன்று மாபோலும் வினைபோன்று மின்றே
திருமுன்பு வம்மீன்க ளெனநின்ற வன்போல்
திரைபந்தி யாய்வந்த கரைநின்ற செந்தில்
சேயோனை யிதயத்தி லேவைத் துளேனே.

○ ○ ○

பெருவேலை யோரத்தி லேபாவ நீக்கும்
பிரசித்தி சேர்சித்தர் வாழ்கந்த வெற்பில்
ஒருசோதி வடிவோடு குகைமேவு செந்தூர்
உயிருக்கோ குயிர்செம்பொ னடிபற்று வோமே.

○ ○ ○

குமரா எனச்சங் கரன்கைகள் நீட்டக்
குதித்தம்மை மடிநின்று பரனேத்தழீ [இ]கொண்
டமரா மகிழ்ந்தாடு செந்தூரிலெம்மான்
அழகான மழமேனி மறவாது நினைவோம்

○ ○

மயில்போற்றி வேல்போற்றி மலியாடு போற்றி
வலகாற் படைச்சேவலும் போற்றி நந்தார்
உயர்வெண் டிரைச்சிந்துவும் போற்றி முருகோன்
உபயப் பதம்போற்றி உறைசெந்தில் போற்றி

○ ○ ○

திருச்செந்தி நாதன் பதத்தே மணக்கும்
திருப்பாட் டிவைக்கார்வம் வைத்தே படிப்போர்
திருப்பெண்டு மக்கட் சிறப்பின்ப வாழ்வுஞ்
சிறக்கத் திகழ்ந்தின்ப வீடெய்துவாரே.

(மொழிபெயர்ப்பு ஆசிரியர்: வித்துவான்.
தீரு. கு. நடேசக்கவுண்டர் அவர்கள்)

சங்கர சத்குரு.

"இதயக் குகையில் இலகுதுன் ஆன்மா: அதையுள்ளறிந்து அது வாயிரு: அதவே இன்பம்: அறிவாயிரு: ஓம் தத்ஸத் இதமஹம்: தத் வமஸி: ப்ரஹ்மைவாஹம்" என்று வேத ரிஷிகள் முழங்கிய தூய வுண்மைகள் மீது மாயை படர்ந்தது. கர்மகாண்டங்களையே பற்றி ஞானத்தை மறந்தனர்.

அனுத்மக்கொள்கைகள் அட்டுழியம் புரிந்தன: கடவுளை மறுப் பவர் ஒருபால்: கடவுளுக்குக் கோரவடிவங்களை ஏற்படுத்தி உயிர்ப் பலிகளீந்து பயங்கரமான தொழுகை செய்பவர் ஒருபால்: சாக்தரின் பஞ்சமகார வாமாசாரங்கள் ஒருபால்: இவற்றிடையே பாரத நாட் டின் செல்வமாகிய அத்யாத்ம தர்மம் சின்னபின்னமாகி உருக்கு லைந்தது. நாட்டின் நிலைமை ஒரு அருளறிவாளனைக்கூவியழைத்தது!

"நான வுலகெல்ல; நானரென்ரராயின்
நான் சச்சி தானந்தனும்"

என்று கர்ச்சித் தெழுந்தது சுத்தாத்வைதச் சுடரேறு—சங்கர ஜகத் குரு! ஆதிசங்கரர் உலகின் அறிவுச்சுடர்: கலைக்கடல்: மலையருவி போலப் பொங்கிவரும் மாசற்ற கடவுட்கவி. சங்கரர் வாழ்வு அத் யாத்ம வெற்றி விளக்கு.

"நான் ப்ரஹ்மம்: வேறு பாடற்ற சமநிலையிலிருப்பவன்: சாந் தன்: சச்சிதானந்தன்: பெயர் வடிவான பேதங்கொண்ட நிலையற்ற உடலல்ல" என்னும் அறிவை நமது ஆவியில் ஊக்கியசங்கரர் சிதம் பரத்தில் சிவனருளால் ஒரு சிவபக்தைக்குப் பிறந்தார் என்று ஆனந் தகிரி கூறுகிறார். காலடியில் சிவகுரு என்னும் நம்பூதிரிக்குச் சிவன ருளால் பிறந்தார் என வித்தியாரண்யர் சொல்லுகிறார். நதி மூலம் எப்படியாயினும் நமது அறிவு வேட்கையைத் தணிக்கும் அதன் தெள்ளூற்றையே நாடிப்பருகுவோம்! சங்கரசத்குரு வாழ்க!

சுத்தானந்த பாரதி

பிரம்மவித்தியா பிரகாசிகை.

[ஆசிரியர்]

உலகத்தில் எண்ணிறந்த பிறவிகளுள் மிகவும் அரிதான இம்மா னிடப்பிறவியைப் பெற்றும், அதில் குருடு, செவிடு முதலாம் குறை களின்றிப் பிறந்தும், நன்மை தீமைகளைப் பகுத்தறியக் கூடிய புத்தி யிருந்தும், எந்த மனிதன் பிறவிக்கடலைக் கடக்க முயற்சிக்கவில் லையோ? அவன் பிரம்மஹத்தி செய்தவனுவானென்று நமது சமய சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன. ஆகையால், அடைதற்கரிய இம் மனிதப்பிறவியைப் பெற்ற ஒவ்வொரு சீவனும் சிற்றின்ப நுகர்ச்சி யிலேயே அமிழ்ந்தி அறியாமல் அதனை விடுத்து பேரின்பத்தை நாடு தல்வேண்டும்.

அதனை அடைதற்குரிய பல சாதனங்களுள், தத்துவ ஞானமே சிரேசாதனமாகும். தத்துவஞானம் விசாரமின்றி உண்டாகாது. அது வும், அதாவது விசாரமும், சாஸ்திரார்த்த ஞானமின்றி அமையாது. அவ்வித சாஸ்திரங்களோ அநந்தம். அவற்றையெல்லாம் கற்றுத் தெளிவது சாதாரண மக்கட்கு முடியாத காரியம். இந்த உண்மை யையுத்தேசித்து வியாச பகவான் வேதங்களிலுள்ள அர்த்தங்களை அதிகாரி பேதமில்லாமல் சகலரும் படித்துப்பயன் பெறும் பொருட் டு புராண ரூபமாகச் செய்தருளினார்.

மொத்தம் பதினெட்டான இப்புராணங்களுள் ஸ்காந்தமும் ஒன்றாகும். அது ஆறு சங்கிதைகளோடு கூடியது. இச்சங்கிதைக ளில் இரண்டாவதாக உள்ளது சூத சங்கிதையாகும். இச் சூத சங்கி தையில், வேதத்தின் பரம தாற்பரியமான ஆத்ம நிஷ்டைக்கு அத்தியாவசியகமான சாதனங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. நான்கு கண்டங்கள் கொண்ட இப்பாகம் ஆறுயிரம் சுலோகங்களு டைத்து, இறுதிக்கண்டமான எக்ய வைபவத்தில் பிரம்ம கீதையும் சூத கீதையும் அடங்கியுள்ளன. ஆத்ம நிஷ்டை இத்தகைய தென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கும் மகிமை வாய்ந்தவை இவ்விரு கீதைகளும் இவை உண்மையில் வேதவடிவமேயாகும். இவற்றைப் பதினெட்டு முறை பாராயணம் பண்ணிய பின்னர்தான்

அதிசங்கரர் பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, உபநிடதங்களாகிய பிரஸ்தான திரயங்களுக்குப் பாஷ்யம் எழுதியதாகக் கூறப்படுகின்றது.

இத்தகைய மகிமை பொருந்திய சூதசங்கிதை முழுவதையும் கற்றுத்தெளிவு தென்றல் இக்காலத்தில் முடியாதகாரியம். இக்கஷ்டத்தை நீக்கக் கருணைகொண்டு, இற்றைக்கு இருநூற்றுப்பத்து வருடங்களுக்கு முன் தமிழ் நாட்டைத் தமது மலரடிகளால் புனிதமாக்கிய சதாசிவப் பிரமேந்திரரென்னும் சிவராஜயோகி சூதசங்கிதையின் நான்கு கண்டங்களின் சாரத்தை 'பிரம்ம வித்யா பிரகாசிகை' என்னும் கிரந்தமாக இயற்றியருளினர். இந்நூல் வடமொழியில் ஆக்கப்பட்டு 'சூதசங்கிதா சாரம்' என அழைக்கப்பட்டது. அதின் மொழிபெயர்ப்பு பின்னர் தமிழ் மொழியிலும் வெளிவந்துள்ளது.

சதாசிவப் பிரமேந்திரர் தாயுமானவர் காலத்தைச்சேர்ந்தவர். பிந்தியவருக்கு, சிவத்துடன் ஈறறக்கலந்து நிற்கும் சிவாத்துவிதநெறியைக் காட்டியவர். திருமூலர் மரபில் வந்த மௌன சுவாமிகளெனில், அவரை வேதாந்த-சித்தாந்த சமரசப்பாலம் கட்டுமாறு தூண்டியவர் சதாசிவப்பிரமேந்திரரேயாவர். நாதாந்த ரூபத்தைப் போற்றிய தாயுமானவருக்கு அவர் வேதாந்த மௌனமாகவே காட்சியளித்தனரெனலாம். சதாசிவர் உபதேசம் பெற்றது காஞ்சி காமகோடிபீட அதிபரான பரமசிவேந்திர சுவாமிகளிடம். மிகவும் சொற்பகாலத்தில், குருவே தம்மைப்போற்றக்கூடிய உன்னத நிலையை அடைந்தனர். கண்டன யோகத்திற் சித்திபெற்ற இவர் புதுக்கோட்டை திருச்செந்தூர், கரூர், கொடுமுடி, கோயம்புத்தூர் முதலான இடங்களில் பல அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளார். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நவராத்திரி பூஜை, தக்ஷிணாமூர்த்தி உற்சவம் இரண்டையும் ஆரம்பித்து வைத்தவரும் அவரே. அக்காலத்தில் அரசாண்ட விஜயரகுநாத தொண்டமானுக்கு அவரது திருக்கரத்தால் மந்திரம் எழுதிய மணல் இன்றும் தட்சிணாமூர்த்தி ஆலயத்தில் வைத்து வழிபடப்படுகிறது. இந்த மஹான் நெரூரில் சமாதியடைந்ததும், அவரின் சமாதிக்கருகில் பிரதிஷ்டை செய்ய காசியில் இருந்து உடனே ஓர் பாணலிங்கம் வந்து சேர்ந்ததும் அற்புதமுறையிலாகும். 1907ம்

ஆண்டில் தென்னாட்டில் யாத்திரை செய்த சிருங்கேரி சாரதாபீட ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹசுவாமிகள் (இம்மலரின் அட்டையில் ஒளிவீசும் ஸ்ரீ சங்கர சேகர பாரதி சுவாமிகளின் குரு). நெரூர் சமாதிக்கோயிலத்தரிசித்த போது நிஷ்டை கூடினர். அப்போது அவர் உள்ளமுருகி இயற்றிய தோத்திரப் பாடல்கள் 'ஸ்ரீ சதா சிவேந்திரஸ்துதி' யென்னும் நூலாக வெளிவந்துள்ளது.

சதாசிவப்பிரம்மேந்திரர் அருளிய சூதசங்கிதா சாரம் போன்ற நூல்கள் அத்யாத்ம வாழ்வுக்கு என்றென்றைக்குமே அரிய வழிகாட்டிகளாக மிளிர்வதோடு, ஏனைய அநுபூதிச் செல்வர்களின் திருவாய்மொழிகளைக் கணிப்பதற்கு ஓர் உரைகல்போலவும் அமைந்துள்ளன. ஆணவ ஆராய்ச்சிச் செருக்கில் தோன்றும், புத்தகப் புலவர்களின் மண்டை கண்டன நூல்களோவெனில், காலவெள்ளத்தில் கரைந்து விடுகின்றன. அவற்றுள் தப்பித்தவறி எதுவாயினும் எஞ்சியிருப்பின், அது வேண்டுவாரின்றியும் தீண்டுவாரின்றியும் செல்லுக்கிரையாவது திண்ணம். அவ்வித அழிவு நேரும் வரையில் பண்டிதச்செருக்கின் திமிரம் குறையாது இருப்பதற்கு உதவ மாத்திரம் அவ்வித நூல்கள் சிறிது பயன்படக் கூடும். நாம் கற்பதும் கேட்பதும் இருதயத்துக்கு இறங்காமல் கழுத்திற்கு மேலேயே நின்று விட்டால், தலை வீக்கத்தை விட வேறு என்னத்தைத்தான் எதிர் பார்க்கமுடியும்?

"கற்பூரப் பாத்தி கட்டிக் கஸ்தூரி எருப் போட்டுக் கமழ் நீர்பாய்ச்சிப்
போற்பூர உள்ளியினை விதைத்தாலும் அதன் குணத்தைப் பொருந்தக் [காட்டும்
சொற் பேதையருக்கு அறிவிங்கு வருமெனவே சொல்லினாலும்
நற்போதம் வராது அவர் குணமே மேலாக நடக்குந்தானே"

என்ற ஆன்றோர் வாக்கு பொய்யாக மாட்டாது.



பஜகோவிந்தத்திற்கு முன்னுரை.

(ராஜா ஜீ)

வயலில் சிறுவாய்க்காலைத் தாண்டுவது போல் பெரும்மாயக் கடலைத் தாண்டினர் ஸ்ரீ சங்கரர். ஆன்ம ஞானம் வளர்வதற்காகப் பல வேதாந்த நூல்களை அவர் இயற்றினர். அதற்கும் மேலாக, உலகத்தார் உள்ளத்தில் பக்தி வளர்ப்பதற்கென்று பல பாடல்களைப் பாடினர். அவற்றில் ஒன்று மிகப்பிரசித்தி பெற்ற "பஜகோவிந்தம்" பாட்டு.

பக்தி மார்க்கம் வேறு, ஞானமார்க்கம் வேறு என்று பக்குவமடையாத சிலர் பேசுவதுண்டு. எடுத்து விவகரிக்கும் விஷயத்தைத் தனிப்படுத்திக் குறிப்பதற்காக இதைப்போன்ற சொற்றொடர்களைப் பண்டிதர்கள் ஆங்காங்கு பிரயோகப் படுத்துவார்கள். அதனல் நாம் குழப்பிக்கொண்டு பொருளைத் தவருக உணரலாகாது. அறிவு நன்ருக முற்றி இதயத்தில் பதிந்தால் அது ஞானமாகும். அந்த ஞானமானது வாழ்க்கையுடன் கலந்து ஒன்ருகச் சென்று செயலுருவமடைந்தால் அதுவே பக்தியாகும். முற்றிய அறிவு பக்தி என்று சொல்லப்படும். நன்ருகப்பதிந்து பக்தியாக உருக்கொள்ளாத அறிவு பயன்படாத ஒரு பண்டம். பொன் வேறு பித்தளை வேறு என்பதைப் போல், ஞானம் என்பது ஒரு தனிமார்க்கம், பக்தி என்பது வேறு ஒரு தனி மார்க்கம் என்று எண்ணுவதும் பேசுவதும் அறியாமை. புலன்களை அடக்கினலன்றி அடைந்த அறிவு முற்றி இதயத்தில் பதியாது; ஞானம் தோன்ருது. புலன் களின் இயற்கை வேகத்தை எப்படி அடக்கியாள்வது? மோகத்தையும் பற்றுக்களையும் நீக்கினலொழிய உள்ளத்தைத் திருத்த முடியாது. உபதேசிக்கும் பொருளைச் செயல் முறையில் ஏற்றும் வழி அறிந்து மக்களுக்கு உபதேசித்த பெரியோர்களில் சிறந்தவர் திருவள்ளுவனர். அவர் சொன்னதாவது:—

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

நம்மாழ்வார் பாசுரம்:—

"அற்றது பற்றெனில் உற்றது விடு உயிர்
செற்றது மன்னுறில் அற்று இறை பற்றே"

என்கிற திருவாய் மொழிப் பாசுரத்திலும் இந்த விஷயமே அடங்கியுள்ளது.

விஷயாவினி வர்த்தந்தே
நிராஹாரஸ்ய தேஹிந:
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய
பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே.

என்கிற கீதா சுலோகமும் இந்த வழியைக் காட்டுகிறது. ஒரு பற்ருனது அடியோடு தீர்ந்து போய் அதினின்று மனம் விடுதலை யடைய வேண்டுமானல் மனசை சர்வேஸ்வரன் பால் செலுத்த வேண்டும். புலன்களை அடக்க வேண்டு மென்கிற எண்ணம் உண்மையில் சித்தியடைய வேண்டுமானல் பக்தியின்றி நிறைவேற்றவே முடியாது என்பதை உணர வேண்டும். புலன்களை அடக்க முயற்சி செய்த அனைவருடைய அனுபவமும் இதுவாகும்.

முத்தி நெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்தி நெறி யறிவித்து

என்று பாடினர் மாணிக்க வாசக சுவாமிகள். "மூர்க்கர்" என்ருல் மெய்ஞ்ஞானத்திற்குத் தடையாக உள்ளத்தில் நிற்கும் அகங்காரமும் ஆசைகளும் பற்றுதலும். அவற்றை விட வேறு யாரே தீய மூர்க்கர்? ஆசமனம் செய்வதுபோல் எளிதாக ஞான சமுத்திரத்தை அள்ளிக் குடித்த ஆதி சங்கராச் சாரியரே பக்தியை வளர்க்கவேண்டிய பாட்டுக்களைப் பாடினர் என்ருல் அதுவே போதும், பக்தியும் ஞானமும் ஒன்றே என்பதற்கு: வேறு சான்று வேண்டியதில்லை. பல வேதாந்த நூல்களை எழுதிய ஸ்ரீ சங்கரர், விஷயம் அவ்வளவையும் வெகு சுருக்கமாக பஜ கோவிந்தப் பாட்டில் அடக்கி, பக்தியும் ஞானமும் ஒன்ருகக் கூடிய பேருண்மைப் பொருளுக்கு எதுகை யும் சந்தமும் கூட்டி, வெகு இனிய வடிவம் தந்து பாடியிருக்கிருர்.

விவேக சூடாமணிச் சாரம்.

சங்கராச் சாரியனுர் தண்ணருளா லேதந்த
துங்கமுறு சூடா மணிச் சார—மிங்கு தரக்
கந்தனுக்கு முன்பிறந்த கற்பகத்தின் நற்கமலக்
கந்தமலர்ப் பாதமென்றுங் காப்பு.

○ ○ ○

கடவுளின் பேரருளாற் பெறப்படுவனவாய், ஆன்மாக்கள் பெறவேண்டியவற்றுள் பெருஞ் சிறப்புள்ளனவாய பொருட்கள் மூன்றுள. அவை முறையே, மானுடயாக்கையும், வீடுபேற்றின் விழைவும், மெய்ஞ்ஞானியின் அருட்காப்புமேயாம்.

....

முன்வினைப்பயனுக, ஓர் மானிட யாக்கையைப் பெற்று ஆடவனுகி, ஞான நூலுணர்ச்சியுள்ளானுய ஒருவன் தனது விடுதலையின்கண் விழைவில்லானேயாகில் அவன் பொய்யாய் அழிந்து போகும் உலகப் பொருட்களினுலே தாக்கப்பட்டுத் தன்னைத்தானே கொன்றவனுகிருன்.

... ...

சாத்திரங்கள் பல பேசினுலென், யாகங்கள் பல புரிந்தாலென், கடவுளை இடையருது வணங்கினுலென், தன்னையும் பரமாத்மாவையும் ஒன்றெனக் காணும் மெய்யுணர்வு பெற்றுலன்றி, நூறு பிரமகற்பங்கள் சென்றுலும் ஒருவன் வீடு பேறெய்தல் அரிதென்க.

... ...

அழிதன் மாலையவாய பறப் பொருட்களிலும் புண்ணியச் செயல்களிலும் பற்றற்ற நிலையை அடைந்தாலொருவன் மெய்யுணர்வின் வழிச்சென்று பிறப்பிறப்பாகிய பேராழியில் மீட்டும் மூழ்காது தன்னைப்பேணிக் கொள்ளல் வேண்டும்.

... ...

நல்வினைகளைப் புரிவதால் மனத்தூய்மை பெறலாமன்றி, கடவுளைக்கண்டின்புறத் தகும் நல்லொளியைப் பெற முடியாது. மெய்யுணர்வோ பகுத்தறிவால்மாத்திரம் பெறப்படுவதொன்றன்றி கோடிக் கணக்கான நல்வினைகளினுல் எய்தப்படுவதொன்றல்ல.

... ...

மெய்யுணர்வடைந்த ஞானிகளின் திருவாய்மொழிகளை மன

தமிழ் நூல்களில் அத்வைதம்.

(தெ. பொ. மீனாட்சிசுந்தரனர்)

தமிழ் நூல்களில் மிகப்பழையது தொல்காப்பியம். இதுகிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே எழுந்தது. இதற்கு உரைஎழுதிய நச்சினர்க்கினியர் இங்கு அத்வைதக் கொள்கையைக் காண்கிருர்; காஞ்சித் திணைச் சூத்திரத்தில் 'வரும் பாங்கரும் சிறப்பின்' என்ற சொற்றெடர் துவைதமற்ற கைவல்ய மோக்ஷ நிலையையும், பாடாண் திணையில் வரும் கந்தழி என்பது மற்றெருரு பற்றுக்கோடு வேண்டாத தன்னிற்ருனே ஒளிரும் பிரமத்தையும் குறிப்பதாகக் கருதுகின்ருர்.

முற்பக்கத்தொடர்ச்சி:-

வொரு மடப்பாட்டுடனிருந்து கேட்டுத் தெளிந்து உண்மையை அறியலாமன்றி, கங்கையிற் படிந்தும் அறம் பல புரிந்தும், மூச்சை அடக்கியும் அது பெறற்பாலதொன்றல்ல.

... ...

உண்மைப் பொருளான கடவுளின் திருவருளை நாடிய ஒருவன் கருணையங்கடலாய பரம்பொருளின் உண்மைகளை அறிந்தவனுய ஒரு குருவைத்தேடி, அவர் திருவாய் மொழிகளை என்றுஞ் சிந்திக்கக்கடவன்.

... .

கடவுளிடத்துக் கொண்ட அன்பானது வளர்வதற்கு நான்கு வழிகள் உள்ளன வென்றும், அவையில்வழி, அன்பு வளர்ந்தோங்காது மடிந்தழியுமெனவும் ஞானிகள் வழங்கியிருக்கின்ருர்கள்.

...

அந்நான்கு வழிகளில், சித்தினதும் சடத்தினதும் உண்மை இயல்புகளை அறிதல் முதலாவதென்றும், இம்மை மறுமைப்போகங்களை வெறுத்தல் இரண்டாவதென்றும், சாந்தம் ஆதியான அறுவகை நற்குணங்களைப் பெறுதல் மூன்ருவதென்றும், வீடுபேற்றிலே தீவிர காதல் கொள்ளல் நான்காவதென்றுங் கட்டளை தந்தார்கள்.

[இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ யோகர் சுவாமிகளின் ஆசியுடனும் ஆலோசனையுடனும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த நூலில் இருந்து தெரிந்து எடுக்கப் பட்டவை. மேலும் வரும்]

'மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்' என்று எழுத்ததிகாரம் கூறுவது, 'எழுத்துக்களில் அகரமாகின்றேன்' என்று கீதை கூறும் கருத்தே ஆம்.

திருக்குறளின் முதற் குறள் அத்வைதமே பேசுகின்றது என்பது பற்றிய போராட்டம், சென்ற நூற்றாண்டில் எழுந்தது. துறவியலின் ஞானப்பகுதியில் அத்வைதிகள் தங்கள் கருத்தினைக் காண்பது அருமையன்று. சார்புகெட ஒழுகுதல், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்டல், வாய்மை வேண்டல் (சோகம் பாவனை), இருள் (அவிச்சை) முதலிய குறிப்புக்கள் அதற்கு வாய்ப்பானவை. பொது நூலாகச் சிறந்தது எவருக்கும் இடம் கொடுப்பதில் வியப்பில்லை..

அனுபூதிமான்களின் காட்சி அத்வைதக் காட்சியே. அவர்கள் பாடலுக்குப் பொருள் கொள்வோரும் அத்வைதம் என்ற சொல்லுக்குப் பலபொருள் கொள்வதும் இயல்பே. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளிச் செய்த நாலாயிரமும் பன்னிரு திருமுறைகளும் அனுபூதிப் பாடல்களாகும். உபநிடதம் போல, இவை தென்னாட்டின் திருமறைகள். சைவர்களும் வைணவர்களும் இவற்றைத் தம் கொள்கையின் ஆணி வேராகக் கொள்வது போல அத்வைதிகளும் கொள்கின்றனர். தத்துவராயர் தம்முடைய பரணிகளில் இவற்றைப் பொன்னே போல் போற்றிக் கையாள்வதனைக் காணலாம்; அவர் திரட்டிய பெருந்திரட்டில் அனுபூதிப்பனுவலில் இந்த அனுபூதிப்பாடல்களே நிறைந்திருக்கக் காணலாம்.

நச்சினார்க்கினியரும் திருவாசகப்பாடல்களை அத்வைதப்பாடல்களென எடுத்துக்காட்டுவார். 'எல்லாம் பிரமம்; எல்லாம் நான்; எல்லாம் மித்தை' என்பவற்றில் எல்லாம் பிரமம் என்பது எங்கும் பேசப்படக் காணலாம். "பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக் கருதிப் போய்த் தேர் முகக்குறும் பேதை குணமாகாமே" என்பது எல்லாம் மித்தை என்பதனை வற்புறுத்துகின்றது என்பர் அத்வைதிகள். சிவமாக்கி எனையாண்ட நீயலால் பிறிது மற்றின்மை, ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை என்ற பகுதிகளையும் எடுத்துக்காட்டுவர்.

சங்கரரே அத்வைதக் கொள்கையை உருப்படுத்தியவர். இவர் பிறந்தது மலையாள நாடு, தொல்காப்பியர் காலமுதல், சேரமாண் பெருமாள் நாயனார் வேணாட்டடிகள் முதலியோர் காலம் வரை. மிகச் சிறந்த தமிழ் நாட்டுப் பகுதியாகவே விளங்கியது. ஆதலின் சங்கரர் தமிழ் நாட்டவரே. அவர் தந்த கொள்கை அந்த வகையில் தமிழ் நாட்டுப் புதையலேயாம். சௌந்தர்யலஹரி அவர் பாடியதாலும், அதில் திராவிட சிசுவெனத் திருஞானசம்பந்தப்பிள்ளையாரைப் புகழ்ந்து பாடி, அவர் பாடல்களின் இனிமை பெருமைகளில் மனமுருகி ஈடுபடுகின்ற இவர், தமிழை நன்குணர்ந்தவராதல் வேண்டும். திரு ஞானசம்பந்தர், "ஈரும்பைத் திசை தானைய் வேரும்பை உடனைனை", "தனதுரை என்னுரையாக" எனப்பாடும் இடங்கள் அத்வைதிகள் பாராட்டும் இடங்கள்.

தமிழ் நாட்டில் அத்வைதத்தினை வளர்த்த தனிப் பெருமை தத்துவராயரைச்சேரும். இவர் சூதசங்கிதையிலுள்ள ஈசுவர கீதையை அழகிய தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவருடைய குருவான சொரூபானந்தர், சொரூபசாரம் என்ற அத்துவித அனுபூதி நூலைத் தெள்ளத்தெளிய அருளிச்செய்துள்ளார். இந்தச் சொரூபானந்தரின் குருவான சிவப்பிரகாசரே பெருந்திரட்டினைத் திரட்டினர் என்ற கொள்கையும் வழங்குகிறது.

உலகம் சிவலிங்க மயம்.

[ரமண பக்தன்]

1. கலைமகள் ஆசிரியர் அன்பர் ஜெகனுதன் அவர்களின் உள்ளம் திருநாவுக்கரசர் சுவாமியவர்களின் தேவாரத்தில் கூறப்பட்ட சரீரம், புலன்கள், மனம், புத்தி, அறிவு, உட்பகைவர்களையிட்டு ஆத்ம ஜோதி மூலம் நன்கு விளங்கப்படுத்தியிருக்கிறது. [159ம் பக்கம் பார்வையிடுக.]
2. ஓர் ரமண பக்தரின் உள்ளம், இவைகள் முறையே, வீடு பிள்ளைகள், மனைவி, கணவன் மனச் சாட்சி, காம குரோதாதிகளென எடுத்துரைக்கிறது. [220ம் பக்கம் பார்வையிடுக.]

3. ஓம் ஸ்ரீ ராம் ஜெயராம், ஜெயஜெய ராம் என்ற தாரக மந்திரத் தின் மூலம் (பரமாத்மாவை) மனச்சாட்சியைத் தட்டியெழுப் புவோமானால், ஓம் நம "சிவய" என்ற வில் அம்புகளுடன் தோன்றி உட்பகைவர்களை ஜெயித்து உட்குடும்பத்தை இரட் சிக்குமென்பது சுவாமி ராமதாஸரின் நம்பிக்கை.

4. "ஆலயமே காயம் அறிவே சிவலிங்கம் என்பது சித்தர் வாக்கி யம். எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே, எல்லா உ - லும் இறைவன் ஆலயமே" என்பது எமது ஆத்ம ஜோதியின் தந் தை சுவாமி ஜீ சுத்தானந்தம் அவர்களின் வாக்கியம்.

5. "நித்தியமாகிய ஆத்ம ஜோதி, வானம், பூமி ஆகியவற்றையும் இவற்றைச் சார்ந்த உலகங்களிலும் வியாபித்திருக்கிறது. எல் லோரும் வணங்கப்பெறும் அந்தத் திவ்ய ஜோதியைத் தியானிப் போம். அந்தத் திவ்ய ஜோதி எங்களுடைய புத்தியை நன்முக ஒளிரும்படி செய்யட்டும்" என்பது காயத்திரி மந்திரம்.

6. இவ்வாக்கியங்கள் மூலம் பரம்பொருளின் உண்மைத் தோற்றத் தை எமது தியானவேளைகளில் ஆராய்வோமானால் உண்மை யை உணரலாம் எமது உடல் ஓர் ஆலயமெனவும், இவ்வால யத்தில் இறைவனிருக்கிறார் எனவும் அவர் சிவலிங்கமென அழைக்கப்படுகிறரெனவும் மேற் கூறப்பட்ட வாக்கியங்கள் மூலம் அறிகிறோம்.

7. இலிங்கமும் ஆவடையும் சேர்ந்ததே சிவலிங்கம். மேற்பாகம் இலிங்கம் கீழ்ப்பாகம் ஆவடை. இந்த ரூபத்திலேயே ஆலயத் தின் மூலஸ்தானமும், முன் மண்டபமும் அமைந்திருக்கிறது. இதே ரூபத்திலேயே எமது சரீரமும் அமைந்திருக்கிறது. ஆத லால் ஆலயமே காயமென்ற உண்மை நன்கு விளங்குகி றது.

8. சிவலிங்க ரூபமாக அமைக்கப்பட்டுள்ள ஆலயத்திற்குள்ளும் ஓர் சிவலிங்கமிருக்கிறது. இது போன்று எமது உடலிலும் ஓர் சிவலிங்கமிருக்கிறது. அதை ஆத்மலிங்கமெனவும் மனச்சாட்சி யெனவும் கூறப்படுகின்றது. [தொடரும்]

ஸ்ரீ சாரதாம்பாள்

சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடம்.

பகவான் சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட மடங்களுள் காலத்தால் முந்தியது ஸ்ரீ சிருங்கேரி மடம். அவர் வாழ்க்கையாலும் வாக்காலும்விளக்கிப்போன அத்யாத்ம சேவையில் இதுவரையும் முதன்மை பெற்றுள்ளதும் அதுவே. இந்த அழகான புனித இடத்தை அவர் தெரிந்து கொண்டதும் மிகவும் அற்புதமான முறையிலாகும்.

வட நாட்டில் வேதாந்தப் பிரசாரம் செய்து விட்டு, சீடர்களுடன் தென் திசை நோக்கிப் பிரயாணம் செய்யும் போது ஓர் நாள், துங்காநதி தீரத்தில் ஓர் தவளை குஞ்சு போட்டிருக்கவும், உச்சிவேளையில் தவளையும் குஞ்சும் வருந்தியதைப் பார்த்த நாகம் ஒன்று தன் படத்தை விரித்து குடை பிடிக்கவும் கண்டார் சங்கரர். தமது திக்கு விஜயத்தில் வேறெங்கும் கண்டிராத இந்த அதிசய அன்புக்காட்சி அவரது கவனத்தை ஈர்த்தது. யோகசித்தியால், அந்த இடத்தில் ரிஷ்யசிருங்கரின் ஆத்ம சக்தி பல்லாயிரம் வருஷங்கள் கழிந்த பின்னரும் ஒளி வீசுவதை உணர்ந்து, தமது மோன தவத்திற்கும் சமயப்பணிக்கும் உகந்த இடம் அதுவேயெனத் தேர்ந்தனர். முப்பத்திரண்டு ஆண்டுகள் மாத்திரம் உடல் கொண்டுலாவிய அப்பெரியார், கன்னி முனையிலிருந்து கைலை முடிவு வரையில் பரவியிருந்த தமது தொண்டிற்கிடையே, சிருங்கேரியில் பன்னிரண்டு வருஷங்கள் கழித்தாரெனில் அந்த இடத்தின் மகிமை குறித்து அவர் கொண்டிருந்த கருத்து விளக்குந் தரத்ததோ?

சங்கரருக்குப் பின் அவரது முதல் சீடரான சுரேஸ்வராச்சாரியரே குரு பீடத்தில் அமர்ந்தார். அவரது மனைவியான பாரதியின் பக்தி, ஞானம், தூய்மை, நடு நிலைமை முதலாய அருங்குணங்கள் காரணமாக சங்கரர் அப்பெண்மணி மீது மட்டற்ற மரியாதை கொண்டிருந்தார். அதனைக் குரு பரம்பரை முறையில் வெளிப்படுத்தவே சிருங்கேரி மடச் சந்நியாசிகள் கி-பி. எட்டாம் நூற்றாண்டு தொடக்கம் இன்று வரைக்கும் 'பாரதி' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொள்கின்றனர்.

சிருங்கேரியில் மக்கள் குடியேறியதும், ஆலயங்கள், பெரியசத் திரங்கள் எழும்பியதும் கி–பி. பதினைலாம் நூற்றுண்டிலாகும். வித் யாரண்யர் என்னும் மகானின் ஆசியுடனும் ஆதரவுடனுந் தோன் றிய விஜய நகர சாம்ராச்சியம் இந்த மடத்திற்குப் பல கிராமங்களை யும் சொத்துக்களையும் மானியமாகக் கொடுத்துள்ளது. ஸ்ரீ வித்யா சங்கரர் ஆலயம் அமைக்கப்பட்டதும். முன்னரேயே இருந்து வந்த ஸ்ரீ சாரதா கோயிலில் தங்க விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்ட தும் அதே நூற்றுண்டிலாகும்.

இப்போ நாம் அங்கே காணும் புதிய ஆலயமும், ஏனைய அழ கான கட்டடங்களும் 33–வது குருவாக முப்பத்து மூன்று வருஷங் களாக [1879—1912] அரசாண்ட ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நர ஸிம்ஹ பாரதி அவர்களின் அளவற்ற சக்தியும் சித்தியுங் காரணமாக எழுந்தனவாகும். எட்டு வயசில் சந்நியாசம் பெற்ற இவர் செய் துள்ள திருப்பணி வேலைகள் அற்புதமானவையாகும். ஆதிசங்கரர் அவதரித்த காலடியில் அவருக்கும் ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் ஆலயங் கள் அமைப்பித்தவர் அவரே. வங்களூரில் ஆச்சிரமமும், சமஸ்கிருத கல்லூரியும் நிறுவியதோடு ஆதி சங்கரர் நூல்களை ஸ்ரீரங்கத்தில் அவர் அச்சேறச் செய்துமுள்ளார்.

ஆதிசங்கரருக்கு சுரேஸ்வராச்சாரியரும், வித்யாசங்கரருக்கு வித்யாரண்யரும் சீடர்களாக வந்து வாய்த்தது போல். இன்றைய ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரர் ஸ்ரீ சச்சிதானந்தருக்குச் சீடராய் வந்த மைந்து 1912ம் ஆண்டில் அபிஷேகம் பெற்றனர். தமது குரு ஆரம் பித்து வைத்த திருப்பணி வேலைகளைப் பூரணமாக முடித்து, அவ ருக்கு ஓர் அழகான சமாதிக் கோயிலும் கட்டிய பின்னர், மடத்தின் பொறுப்பையும் பூஜா ஒழுங்கையும் தமது உத்தம சீடரான ஸ்ரீஅபி நவ வித்யா தீர்த்த சுவாமிகளிடம் ஒப்படைத்து விட்டு, தனிமோன தவத்தில் அமர்ந்துள்ளார் ஸ்ரீ சந்திர சேகரர். அவரது இன்றைய கடுந்தவம் முழுவதும் சனாதன தர்மத்தின் பாதுகாப்பிற்காகவும் அதன் வருங்காலச் சிறப்பிற்காகவுமேயாகும். ஸ்ரீ வித்யாரண்யரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே அவரது தவமும் அமைந்துள்ளதெ னச் சுருக்கமாய்க் கூறிவிடலாம். பகவான் ரமணரின் அத்வைத சித்தி இந்த மஹான் மூலமும், காஞ்சி காமகோடி பீட ஸ்ரீ சந்திரசே

கரேந்திர சுவாமிகள் மூலமும், தென்னாட்டில் இன்று ஒளி வீசுவ தை அகக்கண் திறக்கப்பட்டவர்கள் எவரும் நன்குணரலாம்.

சிருங்கேரியானது மைசூர் சமஸ்தானத்தில் கடூர் ஜில்லாவில் உள்ளது. வங்களூர்–தல்குப்தா இருப்புப் பாதையில், வங்களூரிலி ருந்து நூற்று எழுபத்தொரு மைல் தூரத்தில் உள்ள சிமோகா என்னும் புகையிரத நிலையத்திற்குச் சென்று, அங்கிருந்து 60 மைல் வரையில் வஸ் மார்க்கம் போகவேண்டும், சிமோகாசெல்லாமல், விரூர் புகையிரதச் சந்தியிலிறங்கியும் வஸ்மார்க்கம் போகலாம். ஆனால் அந்தப்பாதையில் வஸ்மாறி ஏறவேண்டும். மைசூர் நகரக் காட்சிகளையும் பார்த்துக்கொண்டு, ஸ்ரீ சாமுண்டி தரிசனமும் பெற விரும்புவோர் வங்களூர்–மைசூர் இருப்புப்பாதையில் செல்லலாம். ரயில் பிரயாணம் ஐம்பத்தெட்டு மைல் தூரம் அதிகமாகும். வங்க ளூரிலேயே யாத்திரைக்குரிய இடங்களுண்டு; முக்கியமானவை:–

(1) கோட்டைக்குத் தென் மேற்கே ஒரு மைல் தூரத்திலுள்ள கங்காதரேஸ்வரர் குகைக் கோயில்;

(2) முப்பத்தைந்து மைல்தூரத்திலுள்ள நந்திமலை. இது கடல் மட் டத்திலிருந்து 4850 அடி உயரத்திலுள்ளது. அங்குள்ள தீர்த் தம் உலகப்பிரசித்தி பெற்றது.

இன்னும் இரக்கமில்லையா?

''பரமஹம்ஸதாஸன்''

எடுப்பு.

இன்னும் இரக்கம் இல்லையா? ஏழை என் மீது
என்னகோ பமோ சொல்லையா? [இன்]

தொடுப்பு.

என்ன தான் கோடிபிழை பண்ணி யிருந்தாலும், நின்
பொன்னடி யேகதியாய் நண்ணி விட்டவனன்றே? [இன்]

முடிப்பு.

கல்லாலும், பிரம்பாலும், வில்லாலும், செருப்பாலும்
கடிந்து சா டினோர்க் கெல்லாம் விரைந்தருள் சுரந்திட்ட
எல்லையில் லாக்கருணை வள்ளலே! நம்பினோர்
இதயத்தில் நடமாடும் சிதம்பர நாதனே! [இன்]

ஸ்ரீ கேதார் பத்திரி யாத்திரை.

சென்னை கழிந்ததும் சிறிது தூரம் வரை நெல்வயல்களைக்காண லாம். நான்கு ஐந்து மணித்தியாலம் வரை செய்யக்கூடிய பிரயாண தூரத்திற்கு நெல்வயல்கள் காணப்படும். மீதித்தூரம் முழுவதும் கோதுமை வயல்களுக்கூடாகவே புகையிரதம் செல்கின்றது. மனி தனுடைய கைபடாத இடமேயில்லை என்று சொல்லத்தக்கதாகக் கோதுமை வயல்கள் கண்ணுக் கெட்டிய தூரம் வரை பரந்துகிடக் கக்காணலாம். இன்றும் வட இந்தியாவிற் பல இடங்களில் பண்டை யமுறைப்படியே கமத்தொழில் நடைபெற்று வருகின்றது. நவீன யந்திரசாதனங்கள் வந்து புகவில்லை. ஆடு, மாடு, குதிரை, எருமை ஆகிய எல்லாப் பிராணிகளும் மனிதனுக்கு உழைத்துக்கொடுக்கின் றன. சில இடங்களில் வயல்களின் வரம்புகளில் வேலிபோல் பனை மரங்களைத் தொகையாகக்காணலாம்.

ஆங்கிலம் அறிந்திருந்தால் எத்தேசத்திற்காயினும் சென்றுவர லாம் என்று சொல்லுவார்கள். ஏனென்றால் ஆங்கிலம் எல்லாத் தேசத்தவர்களாலும் படிக்கப்பட்டு உலகப் பொதுப் பாஷையாகி விட்டது. ஆனல் வட இந்தியாவைப் பொறுத்தவரையில் ஆங்கில பாஷையை நம்பிப்போகக்கூடாது. ஹிந்தி அவசியம் கற்றுக்கொண் டே போக வேண்டும். ஹிந்தி தெரியாது சென்றால் பலகஷ்டங்க ளுக்கு ஆளாகவேண்டி நேரிடும்.

சென்னையிலிருந்து டெல்லி செல்லும் புகையிரதம் 100 மைலு க்கு மேற்பட்ட இடங்களிலே தான் தங்கிச்செல்லும். காலை, மத்தி யானம், இரவு ஆகிய மூன்று சாப்பாட்டு வேளைகளிலும் அரை மணித்தியாலத்திற்குக் குறையாமல் தங்கிச்செல்லும். அந்த நேரத் தில் புகையிரதஸ்தான விடுதி அறைகளில் ஸ்நானம் செய்து சாப்பா டும் சாப்பிட்டு வந்து விடலாம். புகையிரதத்திலேயே வேண்டிய மாதிரியாகத் தென்னிந்திய உணவு வகைகள் கிடைக்கும். டெல்லி செல்லும் வரை பழமும் தாராளமாகக்கிடைக்கிறது, முக்கியமான இடங்களில் பாலும் கிடைக்கிறது, வட இந்தியாவில் பெரும்பா லான இடங்களில் தேநீரோ பாலோ மண்சுண்டுகளிலேதருவார்கள். அருந்தியபின் அவற்றை வெளியே வீசிவிட வேண்டியதுதான். அவற்றில் அருந்தும் போது எங்களூர்ச் சிரட்டைகள் ஞாபகத் திற்கு வருகின்றன.

பழங்கால யாத்திரை முறைக்கும் இப்போதைய யாத்திரை முறைக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. அக்காலத்தில் கால் நலிய உடல் நலிய நாள்ஒன்றுக்கு மனிதன் பத்து அல்லது பதினைந்து மைல் போவான். பாதைகளோ கிடையாது. கல்லிலும் முள்ளிலும் கால்கடுக்க நடப்பான். கயிலாயக் காட்சியைக்காணத் தீராக்காதல் கொண்ட நாவுக்கரசரால் காசிக்கு அப்பால் போக இயலவில்லை. கால் தேய்ந்து, கை தேய்ந்து, உடம்புந்தேய்ந்தல்லவாகஷ்டமுற்றார் நாவுக்கரசர். சம்பந்தரும் சுந்தரரும் கேதார் நாத்திற்குச்செல்ல முடி யாது. தென்னிந்தியாவிலிருந்தே ஞானக்கண்ணுற் தரிசனை பெற்றுத் திருக்கேதாரப்பதிகம் பாடினர். இக்காலத்தில் மிகக் குறைந்த நேரத் தில் நெடுந்தூரத்தைச் சிரமமின்றிக் கடந்து விடுகின்றனர். நடக்க வேண்டிய இடங்களிலும் அரசாங்கத்தாரால் பாதைகள் செப்பனி டப்படுகின்றன. பணம் கொடுத்தால் வேண்டும் பொருள் கைக்கு வந்து விடுகின்றது.

பண்டைக்காலத்தில் பணம் பெரிதும் பயன்படவில்லை. தீர்த்த யாத்திரை போகின்றவர்கள் அக்காலத்தில்பணம் எடுத்துக்கொண்டு போவதில்லை. யாத்திரை வாசிகளைச் சிவ சொரூபமாகவே பாவித்து வேண்டிய உதவிசெய்து அடியார் வழிபாடாற்றினர்கள். யாத்திரை வாசிகளுக்கு விருந்தோம்புதல் புண்ணிய கருமமாகக் கருதப்பட் டது. அதற்குப் பிரதிபலனைத் தீர்த்த யாத்திரை போகின்றவர் உயர் ந்த கருத்துக்களை எங்கும் பரப்பிக்கொண்டே போயினர். மிகமெது வாக எனினும் யாத்திரை வாசிகளின் மூலமாக மேலான எண்ணங் கள் நாடெங்கும் பரப்பப் பட்டன. சௌகரியமான பிரயாணச்சாத னங்களின்றி, புகினப் பத்திரிகைகளின்றி, தபால் தந்தியின்றிச் சீரிய கொள்கைகள் தேசமெங்கும் வழங்கப்பட்டன. அக்காலத்திய யாத் திரை முறையே அதற்குக் காரணமாயிற்று. தற்காலத்தில் மனிதனு டைய வாழ்வின் வேகமோ கணக்கிட முடியாதது. நிமிஷத்துக்கு நிமிஷம் உலக சமாச்சாரம் உலகம் முழுவதும் பரவிக்கொண்டே இருக்கிறது. உயர்ந்த கொள்கைகள் பரவுவதைக் காணேம். நாச வேலைகளே அணுவணுவாகப் பரவிக்கொண்டிருக்கின்றன.

சென்னையில் டில்லி வண்டியில் ஏறும் போதே நடையுடை பாவனைகளில் வித விதமாகக் காட்டிகொடுக்கும் மக்களைக்காண லாம். காலையில் ஒரு மாகாணத்தில் இருந்தால் மாலையில் மற்றொரு மாகாணத்திற்குச் சென்றுவிடுகிறோம். ஒவ்வொரு புகையிரதஸ்தா னத்திலும் ஏறுவோர் இறங்குவோரைக் கவனித்தால் ஒவ்வொருவரி லும் ஒவ்வொரு புதுமை விளங்குவதைக்காணலாம். தடித்ததேகத் தையுடைய தெலுங்கு தேசத்தவர், உயர்ந்து ஒல்லியாயுள்ள ஐதரா பாத்வாசிகள், திடகாத்திரமுள்ள மஹாராஷ்டிரர், கட்டையராகிய கூர்ஜரத்தார், மெல்லியராகிய மத்திய மாகாணவாசிகள், துடுக்கு டைய ஐக்கியமாகாணத்தவர், இன்னும் பலவிதமான பாங்குடைய வர் புகையிரத வண்டிக்குள் வருவதையும் போவதையும் காண லாம். சைவம், வைஷ்ணவம், சாக்தம் ஆகிய சமயங்கள் இந்தியா முழுவதும் ஒரே விதமாய் ஊடுருவிப் பொலிவதை தேசமக்களின் நெற்றியலங்காரங்கள் காட்டாநிற்கின்றன. புண்ணிய நதிகளையோ கணக்கற்ற கோவில்களையோ காணுமிடத்து அவர்களுடைய கைகு வியவும் தலைவணங்கவுஞ் செய்கின்றன. பாஷை வேறுபாடுகளுக் கிடையிலும், பழக்க வழக்க வேறுபாடுகளுக்கிடையிலும் அவர்கள் உள்ளத்தில் ஊறும் தெய்வீக உணர்ச்சி என்றைக்கும் ஒன்றே என் பது வெளிப்படை.

புண்ணிய நதிகளான கிருஷ்ணை, கோதாவரி, நர்மதை, யமுனை, கங்கை முதலியவைகள் ஒன்றன் பின்னொன்றுகக் கடக்கப்படுகின் றன. அவைகளைக் காணுந்தோறும் பண்டைக்காலத்துஇந்தியா கண் ணெதிரே வந்து காட்சி கொடுக்கிறது. இந்நதிகள் வெறும் நீர்ப்பெ ருக்காகக் கருதப்படவில்லை. உயிருடன் பொலிந்து உலகுக்கு உண வூட்டும் அன்னை பராசக்தியின் வடிவென இவைகள் எண்ணப்பட் டன. அத்தெய்வீகத்தான் இந்துக்களிடையில் இன்றைக்கும் இருந்து வருகிறது. இந்தியாவின் நாகரீகம், சீரிய எண்ணங்கள், முடிவான ஞானம் ஆகியவையும் உதித்தது இப்புண்ணிய நதி தீரத்திலே தான். உடலுக்கு உணவையும் உள்ளத்திற்கு ஞானத்தையும் அளித்த பெருமை இந்நதிகளுக்கு உண்டு.

டில்லியினுள் புகைவண்டி நுழையும் போதே பழைய ஞாப கங்கள் நினைவிற்கு வருகின்றன. பாரதகாலத்து அஸ்தினபுரமும்

இந்த டில்லியேதான், சுதந்திர இந்தியாவின் தலை நகரமும் டில்லியே தான். எத்தனை அரசர்களின் வாழ்க்கையைக்கண்டது டில்லிமாநக ரம் சுமார் 60 சதுரமைல் விஸ்தீரண எல்லைக்குள் இருக்கும் கோட் டைகொத்தளங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய அரசனின் கதைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. டில்லியில் இரண்டு டில்லி உண்டு. ஒன்று பழையது மற்றது புதியது. பழையது பழமை யுடனே தான் விளங்குகிறது. புதியது புதுமைபெற்று விளங்குகி றது. புதுடில்லி இந்தியாவிலுள்ள நகரங்களுக்குள் அழகான நகரம் வீதிகள் நேராகவும் அகலமானவைகளாகவும் அமைந்துள்ளன. ஒவ் வொரு வீதியிலும் ஒவ்வொருவகை மரங்கள் நிழலுக்காக உண்டாக் கப்பட்டிருக்கின்றன. ஒரு வீதியில் ஒரு மரத்தைப் பார்த்தால் அவ் வீதியின் இருமருங்கிலும் உள்ள எல்லாமரங்களும் அதே அளவில் அதைப்போலவே வளர்ந்திருக்கின்றன.

டில்லியில் காணப்படும் கட்டடங்கள் யாவும் கூரையில்லாத மொட்டைக்கட்டடங்களே. ஐந்து அடுக்குக்கு மேலான உயரமு டைய கட்டடங்கள் பல காட்சி கொடுக்கின்றன. டில்லிச்செங் கோட்டை பண்டையஅரசர்களின் பண்பாட்டை எடுத்துரைக்கின் றது. தாஜ்மஹால் சாஷகானின் விடாமுயற்சியை விளக்குகிறது, குப்தமரபர் பண்டைய அரசரின் வீரத்தைக் கூறுவதோடு டில்லியின் அழகான தோற்றத்தைத் தம்மிடம் வருவோர்க்கு எடுத்துக்காட்டிக் கொண்டே இருக்கிறது. இராஜகாட் மகாத்மாவின் அஹிம்சையை யும் பாரதப் பண்பாட்டையும் உலகிற்குபதேசித்துக் கொண்டிருக் கிறது.

இத்தகைய டில்லியிலிருந்து இரவு 8 மணியளவில் புயிரதம் ஏறினால் விடிய ஹரித்துவார் சென்று அடையலாம். சாதாரணமாக தென்னிந்தியாவிலிருந்து செல்லும் யாத்திரீகர்கள் ஹரித்துவாரிலிருந் தே புறப்படுவார்கள். இமயத் தொடர்கள் ஹரித்துவாரிலிருந்தே ஆரம்பிக்கின்றன. இமயம் என்றால் ஏதோ ஒரு சிறிய அளவுக்குட் பட்டதன்று. வடக்குத் தெற்காக 400மைல் வரையிலும் கிழக்கு மேற்காக ஆயிரக்கணக்கான மைல் வரையிலும் பரந்துள்ளது.

ஹரித்துவார் என்றால் ஹரியிடம் செல்லும் வழியென்பது பொருள். இங்கு தர்மசாலைகள் அநேகம் உள. இவற்றிலெல்லாம்

யாத்திரீகர் தங்குவதற்கேற்ற வசதிகள் உண்டு. இங்கு ஒரு விசேட தீர்த்தம் உண்டு. அதனைப்பிரம குண்டம் என்பார்கள். கங்கையின் நடுவே மேடை ஒன்று கட்டி இருப்பதினால் கங்கை இரண்டாகப்பிரிந்து பாய்ந்து பின்பு ஒன்று சேருகிறது. தினமும் மாலை ஏழுமணிக்குக் கங்காதேவிக்கு ஆரத்தி நடைபெறும். பக்தர்கள் கங்கைக்கரையிலும் மேடையிலும் ஆயிரக்கணக்கில் கூடுவார்கள். சிறுச் சிறுத் தொன்னைகளில் நெய் அகல்களை ஏற்றிக் கங்கையின் இருமருங்கும் மிதக்க விடுவார்கள். அவை நீரில் மிதந்து செல்லும் காட்சி பேரானந்தத்தை விளைப்பதாய் இருக்கும். 'கங்கா மாயிக்கு ஜே' என்ற கோஷம் எங்கும் கேட்கலாம். மாயி என்றால் தாய் என்பது பொருள். கங்கையே அங்குள்ள மக்களுக்கு உயிரூட்டுவது. எந்தநல்ல கருமத்திலும் முதலில் 'கங்காமாயிக்கு ஜே' சொல்லியே தொடங்குவார்கள். கங்கையை இறைவன் அருட்சக்தியாக—அவன் கருணை வெள்ளமாகக் கருதுகிறார்கள்.

அங்கு கட்டப்பட்டிருக்கும் மேடைமீது பக்தர்கள் கூட்டங்மாக இருந்து பஜனை செய்யும் காட்சி பரமானந்தத்தை ஊட்டுவதாயிருக்கும். உதிர் பூக்களைக் கூடை கூடையாகக் கொண்டுவந்து கங்காதேவிக்குப் பூஜை செய்வார்கள். இப்பூக்களோடுபொரிகடலையும் கங்கையிலுள்ள மீன்களுக்குஉணவாகும். ஜீவகாருண்யர் பலர் மீன்களுக்கு பொரியும் கடலையும் உணவாகப்போடுவார்கள். அங்குள்ள மீன்கள் எவருக்கும் பயப்படாமல் துள்ளிவிளையாடுகின்றன. உணவு கொடுத்துக் காப்பாற்றுபவர்கள் இருக்கிறார்களே தவிர உயிருக்கு உலைவைப்பவர்கள் யாருமில்லை. அதனால்தான் அவைகள் சந்தோஷமாகத் துள்ளிக் குதித்து மனிதருக்கும் களிப்பைபூட்டுகின்றன. இந்த மீன்கள் கங்கையோடு கங்கையாகச் சேர்ந்து கல்கத்தாப்பக்கம் சென்றுவிட்டால் அவை உயிர்தப்பிக் கடலைப்போய்ச் சேர முடியாது. ஏனென்றால் கல்கத்தாமக்கள் அத்தனைபேரும் மீன் பிரியர்கள்

கங்கையின் ஒருபக்கத்திலே மனிதன் மீனுக்கு இரைகொடுத்து வளர்க்கிறான். இன்னொருபக்கத்திலே அதனைத் தனக்கு இரையாக்குகிறான், இவையெல்லாம் இறைவனது சிருஷ்டியின் விநோதங்களே.

கேதார் பத்திரி செல்லுபவர்கள் தமதுயாத்திரைக்கு வேண்டிய ஆயத்தங்கள் யாவும் இங்கிருந்தே செய்வார்கள். யாத்திரைக்கு மிக மிக அவசியமான பொருட்களை மாத்திரம்தான் கொண்டுசெல்ல வேண்டும். சாமான்கள் எவ்வளவு குறைத்துக்கொண்டு செல்லுகின்றோமோ அவ்வளவுக்கு யாத்திரை இன்பமானதே. சட்டை, பெனியன். வேட்டி, துண்டு இவை ஒவ்வொன்றிலும் மூன்று இருந்தால் போதுமானது. அன்றாடம் அவற்றைத் துவைத்து உடுத்திக் கொள்ளலாம். கம்பளிச்சட்டை ஒன்று, இரண்டு கம்பளிகள், கால் உறை, கையுறை, செருப்பு, சப்பாத்து, உறை பனியில் ஏறும் போது ஊன்று கோலாய் உதவத்தக்க நுனியில் கூரானதும் ஒரு ஆள் உயரமானதுமான கம்பு ஒன்று, குடை ஒன்று, பனித்தொப்பி ஒன்று, புட்டிப்பால்இரண்டு-ரின்கள், கொஞ்சம் ஊறுகாய், பெரிய மெழுகுவர்த்தி ஒருடசின், சளி, இருமல், காய்ச்சலுக்குச்சில அவசிய மருந்துகள், ஆதிபன தேடிக்கொள்ளுதல் வேண்டும். காணும் காட்சிகளையும் சந்திக்கும் நண்பர்களையும் படம் பிடிக்க விரும்புவோர் ஒரு படம் பிடிக்கும் கருவியையும் வேண்டிய பிலிம்களையும் எடுத்துக் கொள்ளா வேண்டும். இவை ஒன்றுமில்லாமல் மடியில் ஒரு தம்பிடியும் இல்லாமல் ஒரே ஒரு கம்பிளியுடன் யாத்திரைசெய்யும் யாத்திரீகர்களையும் காணலாம். அது அவர்களுக்குப் பழக்கம். நீண்டயாத்திரையில் எங்களுக்கு அவசியமான சில வசதிகளை நாம் தயாரித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

தற்கால யாத்திரையில் முற்காலத்தைப்போல் எல்லாப்பொருட்களும் கொண்டு போகவேண்டுமென்பதில்லை. மடியில் குறைவில்லாமல் பணம் மாத்திரம் இருக்கவேண்டியது. என்ன வசதி வேண்டுமோ அவ்வளவு வசதியும் பணத்தினால் கிடைக்கிறது.

[தொடரும்]

திருப்பாணாழ்வார்.

[தென்னப்பிரிக்கா-டர்பன்-திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.]

பொன்னி நதி பாயும் சோழவள நாட்டிலே, ராஜநகரமான உறையூரில், ஸ்ரீதரனது ஸ்ரீவத்ஸத்தின் அம்ஸமாய் ஓர் குழந்தை நெற்பயிர்க் கதிரில் அவதரித்தது.

அக்குழந்தையை அவ்வூரிற் பஞ்சமஜாதியிற் பாணர்குலத்துப் பிறந்தானொருவன், கழனியிடமாக இருந்த சிசுவைக் கண்டு மகிழ்ந்து எடுத்துக்கொண்டுபோய், பசுவின் பால் முதலிய பரிசுத்த ஆகாரங்களைக் கொடுத்துப் போஷித்து வந்தான்.

அப்படி வளர்ந்து வந்த குழந்தையானது பகவானருளால் தோன்றியவரானபடியால், பூலோகப்பற்றற்று, திருமாலிடம் மனதைச் செலுத்தி, கான சாமர்த்தியம் பெற்று, அதிலேயே முதிர்ந்து நின்றார். இவருக்கு அப்போது பாணர் என்ற பெயர் சூட்டப்பட்டது.

இப்பாணர் சிலகாலம் சொந்தவூரிலே இருந்து அரங்க நாதனுக்குத் தொண்டு செய்ய உத்தேசித்து, தாழ்ந்த குலத்தில் வளர்ந்தவரென்கிற அச்சம் மனதிடம் புகுந்ததினால், உபய காவேரி மத்தியிலுள்ள ஸ்ரீரங்கத்தில் அடியிடத் துணியாமல் தென்பக்கமிருந்தே, திருமுகத்துறைக் கெதிரில் நின்று யாழுங்கையுமாக, அநேக திவ்விய கீதங்களை, கண்டமானது கருவியுடன் ஒக்க, கேட்பவர் செவியும் மனமும் குளிர, பகவான் திருவுள்ளம் களிக்கப்பாடினார்.

இவ்விழிகுலத்தார் பக்தி பரவசப்பட்டுத் தினம் தினம் வைகறையிலே வந்து இசைபாடி நிற்பர். இங்ஙனம் நடந்து வருமொரு நாளில், தீர்த்த கைங்கரியஞ் செய்கிற யோக சாரங்கர் என்னும் பூசுரர் ஜலங்கொண்டு வருவதற்காகப் பொற்குடத்தை எடுத்துக் கொண்டு, பொன்னித்துறையை அடைந்து, அருகிலுள்ள அதிரூபவதியைக் கண்டு, அருவருப்பாகி "எட்டச்செல் நிற்காதே; போ." என்று கூச்சலிட்டார்.

பாணர் அதனை உணர்ந்தாரில்லை.

பகவானிடம் மனத்தைச் செலுத்தி, மெய்ம்மறந்திருந்தவரைக்கண்டு, மூர்க்ககுணத்துடன் இருக்கிறான் என்று அவர் எண்ணி

பலருடன் கூடி, அவ்விடத்தை விட்டுப் போகும்படி எவ்வளவோ சொல்லியும், முடியவில்லை. பாணகுலத்திலகர் நிச்சலன மனத்தராய் பாடிக்கொண்டிருப்பதைச் சிலர் கண்டு "இவன்யோகி; ஞான யோகி அல்லன், ஆனால் கான யோகி" எனக்கூறிப்பேசாமற் சென்றார்கள். முரட்டுக் குணமுடைய பலர், "இந்தப்பாணனைத் துரத்தாதுவிடுவதில்லை; இவனுக்கென்ன தெரியும்; பக்தியா! வெளிவேஷக்காரன்" என்று வாதஞ்செய்து, பாணர் மேல் கற்களைச் சொர்ணமாரியாக எறிந்தார்கள். அப்படி வீசி எறியப் பட்ட கற்கள் பாணர் மெல்லுடம்பின் மேல் பலமாகத்தாக்கப்பட்டாலும், பக்தி பரவசத்திலிருந்ததினால் அவர் பரிச உணர்ச்சியின்றி இருந்தார்.

பக்தர் பாணர் உடம்பிலும், உள்ளத்திலும் சிறிதும் வருத்தமில்லை. அவருடைய அந்தரங்கத்தில் அமர்ந்திருக்கின்ற அரங்கனது உள்ளம் கலங்கியதுமன்றி, திருநெற்றியிலிருந்து இரத்தம் வழிந்தோடியது.

இதைக் கண்டு அருச்சகர் பயப்பட்டார். உடனே கோயிலதிகாரிகளுக்கு அறிவித்தார். இச்சங்கதி அரசனுக்கும் எட்டி விட்டது. காரணங்காணுது சகலரும் தவித்தார்கள். அரசன் அமைச்சர்களுடன் அநேக விதமாக ஆராய்ந்தும் காரணங்காண முடியாமற்போய் விட்டதால், பெருமாள் திருவடியிலேயே பாரத்தை வைத்துவிட்டான்.

நிற்க, அதற்கு முன்னே, ஒரு தினம் பிராட்டியார், பெருமானிடம் "பக்தன், நம் பாணன் புறம்பே நிற்கப் பார்த்திருக்கலாமோ?" என்று வினவ, அதற்குப்பகவான் விரைவில் அருகில் அழைத்துக் கொள்வதாக வாக்களித்ததை எண்ணி சமயம் பார்த்து நிறைவேற்ற முன்வந்தார். நாயகியின் இஷ்டத்தைநிறைவேற்றவும், பகவானுக்கு சாதியன்று பிரதானம், பக்தியே தான் முக்கியமென்பதை மெய்ப்படுத்திக்காட்டவும், பாணரைப் பெருமைப்படுத்தவும், வேந்தனது திகைப்பை ஒழித்தருளவும் திருவுள்ளங்கொண்டு, அரங்கன் யோக சாரங்க முனிந்திரரது கனவில்தோன்றி "என் பக்தனை இழிவாக நினையாமல், நீர் சென்று அவரைத் தோள்களிலேந்தி அழைத்து வாரும்" என்று கட்டளையிட்டார்.

[தொடரும்]

செய்தித்தீட்டு.

சமயபாட வகுப்பு அங்குரார்ப்பணம்.

கெக்கிராவைச் சைவ பரிபாலன சபையின் சார்பில் 25–7–54 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கெக்கிராவைப் பிள்ளையார் சந்நிதி மண்டபத்தில் திரு. வி. மகாலிங்கம் அவர்களின் தலைமையில் சமய பாடவகுப்பு ஆரம்பமானது. இவ்வகுப்பிற்கு 50 சைவப்பிள்ளைகள் உற்சாகத்துடன் சமுகமளித்தனர். பிரதிஞாயிறுகளில் வகுப்பு நடைபெறும். வகுப்பு நடத்துவோர் திருவாளர்கள்;– ஏ. கே. கண்ணையா, எம். சுப்பிரமணியம், கே. சோமசுந்தரம்.

கொட்டருமுல்லையில் கூட்டுப் பிரார்த்தனை.

சிலாபப்பிரிவில் கொஸ்வத்தைப் பொலீஸ்வட்டாரத்தைச்சேர்ந்த கொட்டருமுல்லைகணேசன் தோட்டத்துப்புராதன ஐயனார்கோவிலில் கடந்த 25 6–54ம் உ திரு. என். நடேசன் அவர்களினால் கூட்டுப்பிரார்த்தனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் 6 மணிமுதல் 8 மணிவரையும் திரு. கே. தியாகராசா ஆசிரியர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வருகின்றது. பலபக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

நாமலிகித ஜெபயாகம்.

நாமலிகிதஜெப யாகத்தில்பங்குபெறும் அன்பர்களின் தொகை வளர்ந்து கொண்டே வருகின்றது. 10–6–54 வரையில் ஆனந்தாசிரமத்துக்கு அனுப்பப்பட்ட நாமக்கொப்பிகளின் கணக்கின்படி 3797 அன்பர்கள் இந்தயாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றார்கள். தென் ஆபிரிக்காவிலும் கீழ் ஆபிரிக்காவிலும் 53 அன்பர்கள் பங்கு பற்றுவதிலிருந்து இந்தயாகம் எவ்வாறு பரவியிருக்கிற தென்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. 10–6–54 வரை எழுதி அனுப்பப்பட்டுள்ள நாமங்களின் தொகை 120, 043, 144.

நாமலிகித ஜெபயாகத்தில் பங்குபெறும் இலங்கை அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

அன்பர்களனுப்பும் நாமலிகிதக் கொப்பிகளைத் தபாற்கந்தோர்களில் கொடுத்து நிறுத்துப்பார்த்து வேண்டியதபால்தலைகளை ஒட்டி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். அப்படி குறைவான தபால் தலைகளை ஒட்டுவதனால் ஆச்சிரமத்தில் உள்ளவர்களுக்கு வீண் சிரமமும் வீண்பொருட் செலவும் ஏற்பட்டு விடுகிறது. இதைப்பற்றி ஒவ்வொரு அன்பர்களும் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்று ஆனந்தாஸ்ரமம் சுவாமி இராமதாஸ் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு மூன்று மாதங்களாக கொப்பிகள் அனுப்பாத அன்பர்களையும் கொப்பிகளை ஒழுங்காக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றார்கள்.

ஒரு நல்ல செய்தி.

அகில உலக யாத்திரை ஆரம்பிக்கப் போகும் சுவாமி ராமதாஸர் அவர்களும் அன்னை கிருஷ்ணபாய் அவர்களும் யாத்திரை முடிந்து இந்தியா திரும்பும் மார்க்கத்தில் இலங்கைக்கும் வர இசைந்துள்ளார்கள் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ குருபூர்ணிமா தின வழிபாடு.

15–7–54 வியாழக்கிழமை மக்கள் அனைவரும் தத்தம் குருநாதனை வழிபட்ட ஒரு நன்னாள். அன்றையத்தினம் திருக்கோணமலை திவ்விய ஜீவன சங்கச்சார்பில் உப்பு வெளியிலுள்ள சிவானந்த தபோவனம் கலைக்கோவில் மண்டபத்தில் காலைமுதல் மாலைவரை ஸ்ரீ சுவாமி சச்சிதானந்த யோகி அவர்களின் தலைமையில் நிகழ்ச்சிகள் நடை பெற்றன.

காலை 9 மணி முதல் மாலை 4மணிவரை,

"சற்குரு ஜெய குரு சச்சிதானந்த குரு
குரு சரணம் குரு சரணம்
சற்குரு சரணம் பவ ஹரணம்"

என்ற அகண்ட நாம பஜனை நடை பெற்றது. மாலை 4 மணி முதல் சகல மத குருமார்களின் பெருமை பற்றிப் பல சொற்பொழிவுகள் நடைபெற்றன. அன்றையத் தினம் அன்னதானமும் நடைபெற்றது.

ரமணி அஞ்சலி

(திவ்வியஜீவன சங்கம்)

"மூன்றுவது திருப்பூர்ணிமா"

நிகழ்ந்த 15-7-54 வியாழக்கிழமை "ரமணி அஞ்சலி திவ்விய ஜீவன சங்கத்தின்" மூன்றுவது "திருப்பூர்ணிமா"வை இம்முறை "குருப்பூர்ணிமா"வாக வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது அன்று அதிகாலை 4-30 மணியிலிருந்து அகண்ட நாம பஜனையுடன் இக் குருப்பூர்ணிமை ஆரம்பமாயது, மாலை 6-00 மணிவரை தொடர்ந்து நடாத்தப்பட்டு 6-00 மணியின்பின் மேற்படி சங்கமாணவிகளினால் கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் நடாத்திக் காண்பிக்கப்பட்டது,

ஸ்ரீ "சுவாமி சிவானந்த சரஸ்வதி" அவர்களின் பொற்கமல "பாதபூசை" வெகுசிறப்பாக நடாத்தப்பட்டது. அதன்பின் திருக்கேதார மகிமை; சமுதாயத்தில் பெண்கள்; மாணவர் கடமை; ஆதியாஞ் சொற்பொழிவுகளும்; யோகாசனம்; சிவானந்த ஞான ஹாஸ்யம்; பாலர்பாடல்; சாவித்திரி நாடகம்; "மாணிக்கவாசகர்" கதாப்பிரசங்கம்; "திருவாசகம்" ஓதல், இன்னும் பற்பல நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டு நன்றியுரையுடன் இக் "குருப்பூர்ணிமா" இனிதே நிறைவேறிற்று. இத் திருப்பூர்ணிமைக் கொண்டாட்டத்தை நாட்டின் கலங்கருதியும்; ஆத்மீக வளர்ச்சியை முன்னிட்டுமே இச் சங்கம் நடாத்த முன்வந்துள்ளது. அன்பர்கள் அனைவரும் ஆத்மீக வளர்ச்சியில் ஈடுபட்டு இறைவனருள் பெறுவாராக!

வாழ்க எமது குருதேவர் சிவானந்த சரஸ்வதி வாழ்க வாழ்கவே.

ஓர் நல்ல எடுத்துக்காட்டு,

யாழ்ப்பாண விஸ்வகர்ம சங்கம் ஓர் விசேஷ மகாநாட்டை சென்றமாசத்தில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கூட்டியதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஏனைய சங்கங்களுக்கும் இது ஓர் நல்ல முன்மாதிரியாகும்.

முதலில் நிகழ்ச்சி விரதத்துடனும் கேதீஸ்வர நாதனுக்கு அபிஷேகத்துடனும் ஆரம்பமாயது, இரண்டு நாள் நடந்த இம் மகாநாட்டில், காலையிலும் மாலையிலும் ஒழுங்காக கூட்டுப்பிரார்த்தனையும் பஜனையும் இருந்தன.

நிகழ்ச்சி நிரலின்படி சங்கத்தின் வருடாந்த அறிக்கையும் வரவு செலவுக்கணக்கும் அங்கீகாரம் செய்யப்பட்டதோடு, "சமூகத்தின் அவசிய கடமைகள்" சமூக சேவைகளும் ஐக்கிய சங்கங்களும் என்பன போன்ற விஷயங்கள் பற்றி உபந்நியாசங்கள் நடந்தன. இரண்டாம் நாள் மாலையில், "தமிழகத்தனிப் பெருந்தலைநகர்" என்னும் நூலினாசிரியரானபண்டிதர் திரு. இ. சி கந்தையா ஆசாரியர் திருக்கேதீஸ்வரத்தின்தொன்மை குறித்து ஓர் ஆராய்ச்சிவிரிவுரை நிகழ்த்தினர்

திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச்சபை காரியதரிசி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களும் சமுகமளித்து மகாநாட்டில் கலந்து கொண்டார். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மாந்தைக் கம்மாளர் பலர் வரவேற்புச் சபையில் அங்கம் வகித்துத் தொண்டாற்றியதானது முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய விஷயம். அவர்களது விரிந்தமனப்பான்மையைப் பாராட்டி சங்கத் தலைவர் திரு. V. S. கந்தையா அவர்கள் நன்றியுரை கூறியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை.

பதுளை சைவபரிபாலன சங்கத்தின் ஆதரவில் 6-8-54 வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிதொடக்கம் சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை கொண்டாடப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்கள் கூட்டுவழிபாடாகப் பாராயணஞ் செய்யப்பட்டதும், செல்வி மீனாக்ஷி சுந்தரசாஸ்திரி, நாயனாரது திவ்விய சரித்திரத்தைச் சங்கீத உபந்நியாசமாக நிகழ்த்தினர். இறைவனது சுந்தர உருவத்தைப் போன்றிருந்தமையால் 'சுந்தரர்' என்றும், தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அங்கெழுந்த ஆலகால விஷத்தை எடுத்து இறைவனிடம் கொடுத்தமை

யால் 'ஆலால சுந்தரர்' என்றும் அவர் அழைக்கப்பட்டாரென்றும் இப்பூவுலக வாழ்விலும் கூட இறைவனோடு ஒரு தனிப்பட்ட நட்புரிமை கிலேக்கக்கூடியதாகத் தனது பக்தி மேலீட்டால் அவரையே தோழனாகக் கொண்டு பக்தியின் பெருமையையும், கடவுள் பக்தர்சனுக்கு எவ்வளவு தூரம் அடிமைப் படுகிறரென்பதையும் தமது தூய வாழ்வினல் உலகுக்கு விளக்கியமையால் 'தம்பிரான் தோழர்' என்றும் சுந்தரர் அழைக்கப்பட்டார் என்றும் உபந்நியாசகர் தமது சொற்பொழிவில் விசேடமாகக் குறிப்பிட்டார்.

சொற்பொழிவின் பின் சுந்தரர் தேவாரப் போட்டி ஒன்றும் நடைபெற்றது. பிரமஸ்ரீ, ஜி. கே. சுந்தர சாஸ்திரிகள், ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஸ்ரீ ஏ. பாலசுப்பிரமணியம் ஆகிய மூவரும்நடுநிலேயாளர்களாகக் கடமையாற்றினர். சரஸ்வதி வித்தியாசாலே மாணவரிற் பலர் இப்போட்டியில்பங்கு பற்றினர். அவர்களுள் செல்வி ஆ. இராஜேஸ்வரிக்கு முதலாம் பரிசும், செல்வன் இ. ஆறுமுகத்திற்கு இரண்டாம் பரிசும், செல்வி செ. சடைச்சிக்கு மூன்றும் பரிசும் கிடைத்தன. செல்விகள் க. சீதாலக்ஷ்மி. க. திலகவதி, திரு. க. சுப்பிரமணியம் ஆகியோர் பக்திக் கீதங்கள் பாடினர்.

சுந்தரர் விழா.

ஷிவிழா நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரித்தமிழ் மன்ற ஆதரவில் 5–8–54 வியாழக்கிழமை மாலே வேகுசிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. கதிரேசன் கோயிலிலிருந்து கதிரேசன் கல்லூரிக்கு சுந்தரர் படம் வெகு அலங்காரமாக அமைத்துக் கொண்டுவரப்பட்டது. திரு. க. சபா ஆனந்தர் **B. A., B. O. L.** அவர்கள் தலேமை தாங்கிச் சுந்தரர் விழாவின் நோக்கம் பற்றிக் கூறினர்கள். கல்லூரி மாணவர்களில் ஆறுபேர் சுந்தரர் சம்பந்தமான பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டனர். கயிலேக்காட்சி, தடுத்தாட்கொள்ளல், கலிக்காமநாயனர் சபதம் என்பனபற்றி கல்லூரி மாணவர்கள் திறம்படநடித்துக் காட்டினர். ஈற்றில் பேச்சுப்போட்டியில் பங்கு பற்றியோருக்கு திருமதி க. சுப்பிரமணியம் அவர்கள் பரிசுகளே வழங்கினர்கள்.

சுத்தமிழ்ப் பயிற்சிமாலே

4ம், 5ம், 6ம், 7ம் வகுப்புகளுக்கு வெளியாகிவிட்டன.

எழுதியவர்: செல்வி செளந்தரம் சந்தனநங்கை கந்தப்பு
[போதனு ஆசிரியை, மகளிர் அரினர் ஆசிரிய கலாசாலே, கோப்பாய்]

வேம்பு வேம்பென வெறுத்தோடும் மாணவர்க்கு கரும்பு கரும்பென விரும்பிக் கற்கும் பயிற்சிகள் நிறைந்துள்ளன.
ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் அதிகபலன் தருவன.

இலக்கியக் குறிப்பு

பொதுக்கல்வித் தராதர பத்திரப் பரீட்சை.
[பெரியபுராணம், சந்திரகாசம், இராமாயணம்]

இக்குறிப்பு மாணவர்க்கு இலக்கியத்தில் ஆர்வத்தை உண்டாக்குவதோடு அவர்கள் கஷ்டத்தையும் ஓரளவு இலகுப்படுத்துகின்றது.
விலே ரூபா ஒன்றரை

ஆக்கியோன்: பண்டிதர் த. சுப்பிரமணியம்,
ஆசிரியர், சித்தங்கேணி.

கைவசமுள்ள நூல்கள்.

1	திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை நவநீதகிருஷ்ணபாரதியார்	15–00
2	திருமந்திரவிளக்கம் சுத்தானந்தபாரதியார்	2–50
3	நமது சமய விளக்கம் ,, ,,	25
4	கவிக்கனவுகள் ,, ,,	1–80
5	நாகரீகப்பண்ணே ,, ,	2–30
6	உலகை உய்வித்த உத்தமன் ஸ்ரீ சித்தவாலந்தர்	1–00

தபாற்செலவு தனி

ஆத்மஜோதி நிலேயம். : : : நாவலப்பிட்டி.

Regd. At The G. P, O.As A News Paper ... C. 59

சிவன பிருஷ்.

இது ரிஷிகேஸ் ஸ்ரீ சிவானந்தர் ஆச்சிரமத்தில் தயாரிக்கப்பெற்றது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் முக்கியமான தும் திறமையான தும்மான மருந்து. இமாலயத்திலுள்ள கிடைத்தற்கரிய மூலிகைகளிலும் வேறு சிறந்த பொருட்களாலும் தயாரிக்கப்பெற்றது. ஒழுங்காக உபயோகித்து வந்தால் நற்சுகத்தையும் நீண்ட வாழ்க்கையையும் அதிக உற்சாகத்தையும் நல்ல சக்தியையும் கொடுக்கக் கூடியது. உடம்பைப் படிப்படியாகக் கொல்லுகின்ற கசம் போன்ற நோய்களுக்கு கைகண்ட மருந்து. வருத்தம் சுகமாகியும் பெலவீனமுள்ளவர்களுக்கு நல்ல அவுடதம். இது மூளையின் சக்தியை வளர்த்து ஞாபகசக்தியைக் கூட்டி மனே ஒருமையை வளர்க்க வல்லது. நல்ல பசி உண்டாக்கி இரத்த சுத்தியையும் உண்டாக்குவது இருதய சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் விசேடமாக **ஆஸ்மா**வுக்கும் சுவாசப்பை சம்பந்தமான நோய்களுக்கும் மிகச்சிறந்ததென்று அநுபவத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காலை மாலை ஒருதேக்கரண்டி மருந்தைச் சாப்பிட்டு அதன்பின் ½ போத்தல் சூடான பால் அருந்தவும்.

பின்வரும் விலாசத்திற்கு 6 ரூபாய் அனுப்பிவைத்தபின் மருந்து பார்சல்மூலம் அனுப்பிவைக்கப்படும்

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

"சாவண" அச்சகம்

புத்தம் புதிய எழுத்துக்களில் புதுப்புது மாதிரிகளில்
கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு
சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில்
எந்தவிதமான வேலைகளும் குறித்தநேரத்தில்,
குறைந்தசெலவில் செய்துகொடுக்கப்படும்.

55, அம்பகமூவா ரோட், போன்:
நாவலப்பிட்டி. 329.

சாவண அச்சகம், நாவலப்பிட்டி. 18-8-54.